Thalaivaasal
தலைவாசல்
எங்கள் பாரம்பரியம்
Thalaivaasal
வீடு 01 வாசல் 102 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை | ஜனவரி 19, 2021



## 10 அத்தியாவசிய பொருட்களுக்கு நிலையான விலை

பெப்ரவரி மாதம், 1ஆம் திகதி தொடக்கம், 10 அத்தியாவசிய பொருள்களின் விலையை, நிலையானதாக முன்னெடுப்பதற்கு வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

03



## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைக்க நிதி உதவி வழங்குங்கள்!
### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை!!


யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் இடித்து அழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி, அனைவருடைய பங்களியுடனும் மீண்டு அமைப்பதற்கு நிதி உதவியினை வழங்குமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இன்றையதினம் யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் எம்.பாலேந்திரா இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

03

# அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குமாறு சர்வ மத தலைவர்கள் கோரிக்கை!
## ஜனாதிபதிக்கு மனு






அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு வடக்கில் உள்ள சர்வ மத தலைவர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மதத் தலைவர்களின் கையெழுத்து அடங்கிய மகஜர் ஒன்று இன்றைய தினம் கோட்டாபய ராஜபக்சவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

03

## மன்னார் வளைகுடாவில் லிமோனைட் மணல் அகழ்வுக்கு அனுமதி!
### சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுகள் மையம் அதிருப்தி

மன்னார் வளைகுடாவில் லிமோனைட் மணல் அகழ்வை மேற்கொள்ள அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சுரங்க நிறுவனத்துக்கு அனுமதி வழங்கியமை தொடர்பில் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுகள் மையம்

03

## மின்சார பாவனையாளர்களுக்கு சலுகை முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம்!

கொரோனா தொற்று நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மின்சார பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு மேல் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பகுதிகளில் உள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள்,

03

## வவுனியாவில் 20 பேருக்கு கொரோனா



வவுனியா பட்டாணிசூர் பகுதியை சேர்ந்த 20 பேருக்கு இன்றையதினம் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. வவுனியா பட்டாணிசூர் பகுதியில் கோரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில்,

அப் பகுதியில் பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது. அதன் ஒருபகுதி முடிவுகள் இன்று வெளியாகியது. அதனடிப்படையில் அப்பகுதியை சேர்ந்த

03

## கொழும்பிலிருந்து வந்த உறவினருக்கு கொரோனா: திருமணம் இடைநிறுத்தம்
### பருத்தித்துறையில் சம்பவம்

கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த நிலையில் நேற்றைய தினம் பருத்தித்துறையில் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திருமண நிகழ்வு இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், மணமக்கள் குடும்பத்துடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை நகர் பகுதியைச் சேர்ந்த மணமக்களுக்கு எதிர்வரும் 23ம் திகதி திருமண நிகழ்வு நிச்சயிக்கப்பட்டிருந்தது.

03

## கிழக்கில் கொரோனா 2,000ஐ தாண்டியது

கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2,000 ஐ தாண்டியுள்ளது. இன்று (19) வரை 2,005 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், கல்முனைப் பிராந்தியத்தில் 1,000 ஐ தாண்டி, 1,051 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 12 மணி நேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பு நகரில் தலா 4 பேரும் செங்கலடியில் ஒருவருமாக 9 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இதுவரை சம்மாந்துறை, ஒலுவில், சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை, வவுணதீவு, காத்தான்குடி, நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு, உகனை, காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பிலுமாக மொத்தம் 12 கொரோனா மரணங்கள் சம்பவித்திருக்கின்றன.

மேலும் கிழக்கில் உயர் கொரோனா

03




**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# 73ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் வழமைப் போன்று கம்பீரமாக நடைபெறும்

கொரோனா பரவலுக்கு மத்தியில் இம்முறையும் 73ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் நடைபெறும் என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

இலங்கையின் 73 ஆவது சுதந்திரதின கொண்டாட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் விசேட கலந்துரையாடலொன்று நேற்று (திங்கட்கிழமை) ஊடக அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அங்கு மேலும் கருத்து வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சர், "உலகம் முழுதும் கொரோனா தொற்றுக்கு முகங்கொடுத்துள்ள போதிலும் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்படுவதைப் போன்று வழமைப் போன்று கம்பீரம் குறையாதவாறு அதேவேளை கடுமையான சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய சுதந்திர தினக் கொண்டாட்டங்களை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இம்முறை சுதந்திர தின மரியாதை அணி வகுப்பில் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், விசேட அதிரடிப்படை, சிவில் பாதுகாப்புபடை மற்றும் தேசிய மாணவர் படையணி என்பவற்றின் சார்பில் 7 ஆயிரத்து 630 படைவீரர்கள் பங்குபற்றவுள்ளனர்.

கடந்த வருடத்தைப் போன்று சுதந்திர சதுக்கத்தில் சுதந்திர தின கொண்டாட்டங்கள் இடம்பெறும். ஜனாதிபதி கோட்டாபய ராபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டு விசேட பிரதிநிதிகள் நிகழ்வின் பிரதம பங்பற்றாளர்களாக இருப்பார்கள்.

சுதந்திர தின அணிவகுப்புக்கள் மற்றும் கலாசார நிகழ்வுகளில் கலந்து கொள்கின்ற அனைவருக்கும் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும்.

சுதந்திர தினத்திற்கு முன்னர் நடைபெறும் மத வழிபாடுகள் பெப்ரவரி 2ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். பெப்ரவரி 3ஆம் திகதி மருதானை விகாரையில் தான நிகழ்வு இடம்பெறும். ஏனைய சர்வமத வழிபாடுகள் சுதந்திர தினத்தன்று நடைபெறும்.

அதற்கமைய பௌத்த மத வழிபாடுகள் காலை 6.30க்கு நாரஹேன்பிட்டியவிலுள்ள



அபயராம விகாரையிலும் இந்து மத வழிபாடுகள் பம்பலபிட்டி புதிய கதிரேசன் ஆலயத்திலும் 6.35க்கு இஸ்லாம் மத வழிபாடுகள் கொழும்பு-4 நிமல்பாதை மஜ்மாயில் கமிராத் ஜூம்மா பள்ளி வாசலிலும் 7.15 க்கு கிருஸ்தவ வழிபாடுகள் பொரளை தேவாலயத்திலும் நடைபெறும்.

அதனையடுத்து முப்படையினரின் மரியாதை அணிவகுப்பு நடைபெறும். இதில் 3 ஆயிரத்து 171 இராணுவத்தினரும் 808 கடற்படையினரும் 997 விமானப்படையினரும் 664 பொலிஸாரும் 432 விசேட அதிரடிப்படையினரும் 558 சிவில் பாதுகாப்புபடையினரும் 336 தேசிய மாணவர் படையணி பங்குபற்றுவார்கள். இதனைத் தொடர்ந்து கலாசார அணிவகுப்பு இடம்பெறும்.

இதில் முப்படை, சிவில் பாதுகாப்பு படை, பொலிஸ், தேசிய இளைஞர் பாதுகாப்புபடை மற்றும் மாகாணசபை கலாசாரசபையை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடகக் கலைஞர்கள் உள்ளிட்ட 341 பேர் பங்குபற்றுவார்கள். இம்மாதம் 29, 30, 31ஆம் திகதிகளிலும் பெப்ரவரி 1, 2, 3 ஆம் திகதிகளிலும் சுதந்திர சதுக்கத்தில் ஒத்திகைகள் இடம்பெறும்.

அத்தோடு சுதந்திர தினத்தன்று இடம்பெறும் முக்கிய நிகழ்வாக டீ.எஸ். சேனாநாயக்கவின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தும் வைபவம் காலை 7.15 மணிக்கு முன்னாள் சபாநாயகர் கருஜயசூரியவின் பங்குபற்றலுடன் நடைபெறும்.

பெப்ரவரி முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரை சகல அரச திணைக்களங்களிலும் நிறுவனங்களிலும் தேசிய கொடி பறக்கவிடப்படுவதோடு, 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் மின்விளக்கு அலங்காரங்களையும் செய்ய முடியும்.

இவ்வாறு எந்தவிதமான நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டாலும் குறைந்தளவானோரின் பங்குபற்றலுடன் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமையவே முன்னெடுக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

# சுயதனிமைப்படுத்தலில் கல்வி அமைச்சர்

கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவுடன் நெருங்கி பழகியதை அடுத்தே அவர் சுய தனிமையில் இருக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று (திங்கட்கிழமை) இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவிற்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுகாதார அமைச்சில் 08 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்தோடு அவர்களுடன் முதல் தொடர்புடையோர் என்ற அடிப்படையில் 74 பேர் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தடுப்பூசி பகிர்வில் ஏழை, பணக்கார நாடுகளுக்கு இடையிலான பாகுபாடு

## உலக சுகாதார அமைப்பு கவலை

உலகில் ஏழை மற்றும் செல்வந்த நாடுகளுக்கு இடையே கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் பாகுபாடுகள் குறித்து உலக சுகாதார அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

இத்தகைய பாகுபாடான தடுப்பூசிக் கொள்கைகளால் உலகம் தார்மீக அடிப்படையில் தோல்வியடையும் என சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் ஆதனோம் கெப்ரியேசஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை ஜெனீவாவில் இடம்பெற்ற உலக சுகாதார அமைப்பின் செயற்குழுக் கூட்டத்தில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஏழ்மையான நாடுகளில் கொரோனாவால் அதிகம் பாதிப்படக்கூடிய தரப்பினருக்கு கொரோனா தடுப்பூசிகள் கிடைக்க முன்னரே, பணக்கார நாடுகளில் நல்ல உடல் நலத்துடன் உள்ளவர்களுக்கு தடுப்பூசி கிடைப்பது நியாயம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை பணக்கார நாடுகளில் 39 மில்லின் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் ஒரு ஏழை நாடுகளுக்கு மிக-மிக குறைவான அளவு தடுப்பூசிகளே வழங்கப்பட்டுள்ளதாகவும் கெப்ரியேசஸ் சுட்டிக்காட்டினார்.

இதுவரை, இந்தியா, சீனா, ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் தங்களுக்கென தனியாக கொரோனா தடுப்பு மருந்துகளை உருவாக்கிக்கியுள்ளன. ஏனைய பல உலக நாடுகள் பைசர் தடுப்பூசியை பயன்படுத்தி வருகின்றன.

தடுப்பூசியை கண்டுபிடித்து உற்பத்தி செய்யும் பெரும்பாலான நாடுகள் அவற்றின் பெரும் பகுதியை தங்கள் சொந்த நாட்டு மக்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்குகின்றன.

இது தார்மீக அடிப்படையில் உலகம் சந்திக்கும் மிகப் பெரிய தோல்வி. இந்தத் தோல்விக்கான விலையாக ஏழை நாடுகளிலுள்ள மக்கள் தங்கள் உயிர்களைப் பலிகொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் ஆதனோம் கெப்ரியேசஸ் தெரிவித்தார்.

முதலில் எனக்கு தான் தடுப்பூசி என்கிற அணுகுமுறை நம்மை நாமே தோற்கடித்துக் கொள்ளும் விதத்தில் அமையும். இது தடுப்பூசியின் விலையை அதிகரிக்கும். பதுக்கலை ஊக்குவிக்கும். இது போன்ற செயல்களால் கொரோனா நீண்ட நாட்களுக்கு நம்மிடையே நீடிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ரஞ்சனுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது – சுமந்திரன்

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்படுவதில் இருக்கும் வெற்றிடத்தினால் நேர்மையான மக்கள் பிரதிநிதிக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



ரஞ்சன் ராமநாயக்கவின் நீதிமன்ற அவமதிப்பு தீர்ப்பு தொடர்பான தமது கருத்தினை இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில், சுமந்திரன் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

குறித்த அமர்வில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "ரஞ்சன் ராமநாயக்க குறித்த வழக்கில் நானே அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என்பதை தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

நேர்மையானதொரு அரசியல்வாதியின் சார்பில் நான் அவ்வழக்கினை முன்னெடுத்ததில் பெருமையடைகின்றேன். துரதிஷ்டவசமாக அவர் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டு நான்கு வருட கடூழிய தண்டனை விதிக்கப்பட்டது அசாதாரணமானதும் பாரதூரமானதொரு நிகழ்வாகும்.

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக சட்டங்கள் இயற்றப்படாத காரணத்தினால் நாடாளுமன்றம் இதற்கு பொறுப்பு கூற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

நீண்ட காலமாக இவ்வாறான நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்பட வேண்டிய தேவையிருந்தும், பொதுநல நோக்கோடு அநேக வரைபுகள் வரையப்பட்டும் சட்டங்கள் இயற்றப்படவில்லை. எனவே காட்டுக்கழுதைக்கு கிடைத்த சுதந்திரம் போல எவரும் எதனையும் தீர்ப்பளிக்க கூடியதொரு சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

மேலும் உள்ளூர் சட்டங்கள் இயற்றப்படாத நிலையில் ஆங்கில சட்டமே நடைமுறையில்கடைபிடிக்கப்படுவதாலும், ஆங்கில சட்டத்தில் இப்படியான கூற்றுக்கள் நீதிமன்ற அவதூறாக கணிக்கப்படுவதில்லை என்பதனை கருத்தில் கொள்ளாது, குறித்த தீர்ப்பினை அளித்தது தவறானதொரு போக்கு என்பதே தமது நிலைப்பாடு.

அத்துடன் நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்படுவதில் இருக்கும் வெற்றிடமானது நேர்மையான தொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு அசாதாரணமுறையில் அநீதி இழைக்கப்பட வழி வகுத்துள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாணவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை: வதந்தியால் சம்மாந்துறையில் பதற்றம்

மாணவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளதாக பரவிய வதந்தியை அடுத்து பெற்றோர் பாடசாலையை முற்றுகையிட்டு மாணவர்களை அழைத்துச் சென்ற சம்பவம் சம்மாந்துறையில் பதிவாகியுள்ளது.

அம்பாறை - சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை மாணவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள பாடசாலைக்கு சுகாதார அதிகாரிகள் வருவதாக பெற்றோருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து பாடசாலைக்கு படையெடுத்த பெற்றோர்கள், தமது பிள்ளைகளை பாடசாலையில் இருந்து விடுமாறும் பிசிஆர் எடுக்கவேண்டிய தேவையில்லை எனவும் அதிபர்களுடன் முரண்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அப்படியான நடவடிக்கை எடுக்கப்படவில்லையென தெரிவித்த அதிபர்கள், இது ஒரு வதந்தி என தெரிவித்தனர்.

இருந்தபோதும் பெற்றோர் அதிபர்களின் பேச்சை பொருட்படுத்தாது தமது பிள்ளைகளை பாடசாலையில் இருந்து அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன் காரணமாக குறித்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அரசியல் கைதிகளுக்கு...

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த மாதம் யாழ் மாவட்டத்தில் உள்ள சர்வ மத தலைவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

அதில், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக வடக்கில் உள்ள சர்வ மதத்தலைவர்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையில், சர்வ மத தலைவர்களிடம் கையெழுத்து பெறப்பட்டு இன்றைய தினம் யாழ்.ஸ்ரீநாக விகாரை விகாராதிபதி மீஹாகஜதுரே ஸ்ரீ விமலதேரர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மதத்தலைவர்களின் கையெழுத்து அடங்கிய மகஜரை குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் மு.கோமகன் தேரரிடம் வழங்கிவைத்துள்ளார்.

அவர்கள் அனுப்பியுள்ள மகஜரில்,

சிறீலங்காவில் பல்வேறு சிறைகளில் இருக்கும் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கும் படியாக வடக்கிலுள்ள மதத் தலைவர்களின் வேண்டுகோள்

"மேதகு ஜனாதிபதி அவர்களே,

பல்வேறு (இந்து பௌத்த முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவ) மதத் தலைவர்களாகிய நாங்கள் சிறைகளில் உள்ள அனைத்து அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு அளிக்கும்படி தங்களை மனப்பூர்வமாக வேண்டிக் கொள்கிறோம்.

அரசியல் கைதிகளின் பெற்றோர், மனைவிமார் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் கண்ணீரோடு எங்களை அணுகி எப்படியாவது அவர்களை விடுவிக்கும்படி கேட்டுள்ளார்கள் அவர்களுடைய கண்ணீரும் மனமுடைந்த நிலையும் எமது உள்ளத்தை தொட்டுள்ளது இந்தக் கைதிகளில் சில பேர் தங்களுடைய வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமலே 8 - 10 வருடங்கள் சிறையில் இருக்கிறார்கள.

சில பிள்ளைகள் பால.வயதுகளில் இருக்கும் பொழுதே அவர்களுடைய பெற்றோர் அவர்களது குடும்பங் களிலிருந்து அகற்றப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக் கிறார்கள். அத்தோடு தங்கள் குடும்பங்களை பராமரிக்க அவர்களுகது எந்த வழியும் இல்லை. முன்னர் எப்போதையும் விட தற்போதுள்ள கொரோனா கொள்ளை நோய் வேகமாகப் பரவும் சூழ்நிலையில் சிறைக் கொத்தணியில் 4000க்கு மேற்பட்ட கைதிகளும், 16 அரசியல் கைதிகளும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதோடு அவர்கள் செய்வதறியாது திகைத்துப் போயும் உள்ளம் உடைந்தும் இருக்கிறார்கள் குடிமக்களில் ஒரு பகுதியினர் அவர்கள் எவ்வளவு சிறிய தொகுதியினராக இருந்தாலும் அவர்கள் கடுமுனைப்பான துன்பங்களுக்கும் மன அழுத்தங்களுக்கும் உட்பட்டிருக்கும் பொழுது ஏனைய குடிமக்கள் அக்கறை கொள்ளாமல் இருக்க முடியாது நீண்டகால சிறைத் தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் மரணதண்டனை பெற்ற கைதிகள் கூட விடுவிக்கப்படுவதை நாம் ஒவ்வொரு நாளும் கேள்விப்பட்டுக்கொண்டு இருக்கிறோம்.

துர்பேறு வசமான அரசியல் கைதிகள் இதே நன்மைகளில் எதையும் அனுபவிக்கவில்லை என்பதை கவனிப்பதால் நாம் கவலையடைகிறோம். இந்த அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டால் அவர்கள் சமூகத்துக்கு எந்த பாதிப்பையும் விளைவிக்க மாட்டார்கள் என்று நாம் மனப்பூர்வமாக நம்புகிறோம்.

பிரதான சமூக நீரோட்டத்துக்குள் தாங்கள் வருவது குறித்து அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுவதானது எமது நாட்டின் சமாதான மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு உதவும் என நாம் உணர்கிறோம்.

மேலும் ஜனாதிபதியிடமிருந்து அனுகூலமான பதில் கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

## வவுனியாவில்...

20 பேருக்கு தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டது. குறித்த எண்ணிக்கையுடன் வவுனியாவில் கடந்த இரு வாரங்களில் 231 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 10 அத்தியாவசிய...

இது தொடர்பாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர் தன கருத்து தெரிவிக்கையில், 6 மாத காலத்துக்கு விஸ்திர விலையை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த் துள்ளது என்று கூறியுள்ளார்.

இந்தப் பொருள்களின் விலையை, 6 மாதங்களுக்கு நிலையானதாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் புதிதாக வரி விதிக்கப்பட்டால், அல்லது வெளிநாட்டு நாணயத்தில் மாற்றம் ஏற்பட்டால், இந்த பொருள்களின் விலையில் மாற்றம் ஏற்படலாம் என்றும் கூறியுள்ளார்.

உள்ளூர் உற்பத்தியாளர்கள், நேரடியான முதலீட்டாளர் களிடம் இருந்து இது குறித்த ஆலோசனைகளை பெறவுள்ளதாவும் 22ஆம் திகதி வரைக்கு இது குறித்த ஆலோசனைகளை சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## மன்னார்...

அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இந்த திட்டம் மன்னார், அதன் கடல் தேசிய பூங்கா மற்றும் அதன் வளமான பல்லுயிர் பெருக்கத்திற்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தும் என்று சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுகள் மையம் தெரிவித்துள்ளது.

26 கி.மீ நீளமும் 8 கி.மீ அகலமும் கொண்ட மன்னார் தீவின் மணலில் லிமோனைட் என்ற தாதுக்கள் ஏராளமாக உள்ளன.

டைட்டானியம் டை ஒக்சைடு, டைட்டானியம் (IV) ஒக்சைடு அல்லது டைட்டானியம் (TiO) ஆகியவற்றின் முக்கிய மூலம் லிமோனைட் ஆகும்.

இந்தநிலையில் அவுஸ்திரேலிய நிறுவனத்தின் சுரங்கத் திட்டம் மன்னார் தீவில் நிலத்தடி நீர் அட்டவணைக்கு சேதத்தை ஏற்படுத்தும்.

அத்துடன் இதன் விளைவாக உப்பு நீர் குடிநீரை மாசுபடுத்தும் அபாயம் ஏற்படும் என்றும் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுகள் மையம் குறிப்பிட்டுள்ளது.

அதே நேரம் இறுதியில் மீன்பிடி மற்றும் பிற முதன்மைத் தொழில்களைச் சார்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான குடியிருப்பாளர்களின் வாழ்க்கையை சீர்குலைக்கும்.

அத்துடன் கடல் வாழ் உயிரினங்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வுகள் மையம் குறிப்பிட்டுள்ளது.

## மின்சார...

தொழிற்சாலைகளினது மின்சார பாவனையாளர்களுக்கு அதன் கட்டணத்தை செலுத்துவதற்காக சலுகை காலம் வழங்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்றுக்காரணமாக பாதிக்கப்பட்ட மின்சார பாவனையாளர்களுக்கு சலுகை வழங்குவதற்காக மின்சக்தி அமைச்சர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோர் இந்த யோசனைகளை அமைச்சரவையில் முன்வைத்திருந்தனர்.

இதற்கமைய, இரண்டு வாரங்களுக்கு மேல் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பகுதிகளில் உள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகளினது மின்சார பாவனையாளர்களுக்கு 6 மாதங்களுக்கு சலுகை காலம் வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அது வரையில் மின்துண்டிப்பு செய்யாதிருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்ட சினிமா திரையரங்குகளில் கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான மின் கட்டணப்பட்டியலை அதன் சமமான 12 மாத தவணைகளில் செலுத்துவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இதுதவிர, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள தங்குமிடங்களுக்காக கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் இந்த வருடத்தின் எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரையான மின்கட்டணப்பட்டியலை 12 மாதாந்த தவணைகளில் செலுத்துவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பிலிருந்து...

குறித்த திருமணத்திற்காக மணமக்களின் உறவினரான தொற்றாளர் தனது 6 வயது பிள்ளையுடன் கொழும்பில் இருந்து பருத்தித்துறைக்கு அண்மையில் வந்துள்ளார்.

கொரோனா அபாய வலயமாக காணப்படும் கொழும்பில் இருந்து வந்துள்ளமையால் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

குறித்த தொற்றாளர்கள் அவ் அறிவுறுத்தலையும் மீறி கடந்த தினங்களில் மணமக்கள் வீடு உள்ளிட்ட பல இடங்களில் நடமாடியுள்ளார்.

தொற்று உறுதி செய்யப்பட்ட நேற்றைய தினம் (ஜன-18) குறித்த திருமண நிகழ்வின் பொன் உருக்கும் சடங்கு இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் நேற்று மணமகன் வீட்டிற்கு சென்றிருந்த குறித்த தொற்றுறுதியானவர்கள் அங்கு மணமகன் குடும்பத்தினருடன் நெருக்கமாக இருந்து உறவாடி அளவாளாவியிருந்ததுடன், பிற்பகல் வேளையில் மணமகள் வீட்டிற்கும் சென்றுள்ளார்.

மணமகள் வீட்டில் குறித்த தொற்றாளர் சென்றிருந்த நிலையில் தான் அவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்ட தகவலை சுகாதார பிரிவினரால் தேடிச் சென்று வழங்கப்பட்டிருக்கிறது.

இதையடுத்து மணமகன் வீட்டார் பருத்தித்துறை சுகாதர பிரிவு அதிகாரியை தொடர்புகொண்டு திருமண நிகழ்வை சுகாதார-பாதுகாப்பு காரணங்களுக்காக பிற்போடுவதற்கு முடிவு செய்திருப்பதாக தெரியப் படுத்தியுள்ளனர்.

ஏற்கனவே ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவு பெற்று மண நாளும் அண்மித்துள்ள காரணத்தினால் உடனடியாக பி.சி.ஆர். பரிசோதனை எடுத்து விட்டு, குறித்த தினத்தில் திருமண நிகழ்வை நடத்துமாறு சுகாதாரப் பிரிவு அதிகாரியால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

இருந்தும் மணமகன் வீட்டார் சுகாதார பாதுகாப்பு காரணங்களை ஏற்று சுய தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து,

பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தி தொற்று ஏற்படவில்லை என்பதனை உறுதி செய்யத பிற்பாடு வேறு தினத்தில் திருமண நிகழ்வை நடத்துவதில் உறுதியாக இருந்துள்ளனர்.

அதற்கமைவாக குறித்த திருமண நிகழ்வு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு முதல் கட்டமாக மணமக்கள் வீட்டார் சுய தனிமைப்படுத்தலுக்கு தம்மைத் தாமே உட்படுத்திக் கொண்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் கடந்த நாட்களில் நடமாடிய இடங்கள் தொடர்பான விபரங்கள் சேகரித்து மேல் நடவடிக்கையினை மேற்கொள்ள பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் கொரோனா...

அபாய பிரதேசங்களாக ஏழு பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கிண்ணியா, கல்முனை தெற்கு, திருகோணமலை, உப்புவெளி, காரைதீவு, காத்தான்குடி, அம்பாறை ஆகிய பிரதேசங்களே இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் ஆகக் குறைந்த கொரோனாத் தொற்றாளர்கள் 88 பேர் அம்பாறை சுகாதாரப் பிரிவிலும் ஆகக் கூடிய தொற்றாளர்கள் 1051 பேர் கல்முனை சுகாதாரப் பிரிவிலும் அடையாளம் காணப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## முள்ளிவாய்க்கால்...

அவர் மேலும் தெராவிக்கையில்,

பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து 08.1.2021 அன்று இரவு இடித்து அழிக்கப்பட்ட முள்ளிவாய்கால் நினைவுத் தூபியானது பல்கலைக்கழக மாணவர்களின் உணவு தவிர்ப்பு போராட்டம் மூலமாகவும், மாணவர்களின் போராட்டம் மூலமாகவும், உலகத் தமிழர்கள் மற்றும் ஏனைய மக்களின் ஆதரவுடன் மீள அமைப்பதற்கு அனுமதி கிடைக்கப்பெற்று கட்டுமாண பணிகள் ஆரம்பிப்பதற்கு காரனமாக அமைந்த அனைவருக்கும் முதற்கண் நனௌறியினை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

குறித்த தூபியின் மீள நிர்மாணிப்பானது சமூகமயப் படுத்தப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு ஆதரவு வழங்கும் அனைவருடைய நிதி பங்களிப்புடன் அமைக்க எண்ணியுள்ளோம்.

இதற்கான நிதியானது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின், 162100100000661 எனும் மக்கள் வங்கியின் கணக்கு இலக்கத்திற்கு அனுப்பி வைக்க முடியும்.

மாணவர் ஒன்றியத்தின் தலைமையில் கட்டுமான பணிகள் இடம்பெறும் என்பதை அறியத்தருவதுடன் குறித்த தூபி அமைப்பதற்கு அனைவருடைய ஆதரவையும் வேண்டு நிற்கின்றோம்.

மேலும் 13.1.2021 திகதியிடப்பட்ட மாணவர் ஒன்றியத்தின் நிதி சேகரிப்பு அறிக்கையானது முதற்கட்ட அறிவுறுத்தல் அறிக்கையாகும் என்பதனை மாணவர் ஒன்றியம் அறியத்தருகின்றது.

அது மாத்திரம் இல்லாமல் இதுவரை காலமும் 19.01.2021 வரை மாணவர் ஒன்றியத்தினால் நிதி சேகரிப்பு இடம்பெறவில்லை என நாம் அறியத்தருகின்றோம்.

எந்தவொரு நிதியம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கணக்குக்கே கொண்டுவரப்பட்டு தூபி அமைக்கப்படும்.

ஏனைய எந்தவொரு நிதி கையாழ்கைக்கும் மாணவர் ஒன்றியம் பொறுப்புக்கூற முடியாது என்பதை அறியத்தருகின்றோம் என தெரிவித்துள்ளனர்.

# கொரோனா தொற்று 53ஆயிரத்தை தாண்டியது.

நாட்டில் மேலும் 332 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி இதுவரை அடையாளம் காணப்பட்ட மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 408 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை இன்று நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 649 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளனர்.

அதன்படி, இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 45 ஆயிரத்து 820 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் தொற்று உறுதியானவர்களில் 7ஆயிரத்து 324 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்தோடு கொரோனா தொற்று சந்தேகத்தில் 717 பேர் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன் 264 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பதவியேற்கின்றார் ஜோ பைடன்
## இராணுவ கட்டுப்பாட்டில் தலைநகரம்!




அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் நாளை(புதன்கிழமை) பதவியேற்கவுள்ள நிலையில், தலைநகரம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பைடன் வெற்றி பெற்று, அமெரிக்காவின் 46-வது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார்.

நாளை அவர் பதவியேற்கவுள்ளார். இந்தத் தேர்தலில் குடியரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் ஆரம்பத்தில் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாமல் பிடிவாதமாக இருந்து வந்தார்.

இதற்கிடையில், தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பைடனுக்கு வெற்றி சான்றிதழ் அளிப்பதற்காக அமெரிக்க நாடாளுமன்றத்தில் இரு அவைகளின் கூட்டுக்கூட்டம் கடந்த 6ஆம் திகதி நடைபெற்றது.

இதன்போது நாடாளுமன்ற கட்டடத்திற்குள் நுழைந்த ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

இந்த வன்முறையில் பொலிஸ் அதிகாரி உள்ளடங்களாக 5 பேர் உயிரிழந்தனர். உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த சம்பவம் தொடர்பாக நூற்றுக்கும் மேற்பட்டோரை அமெரிக்க மத்திய புலனாய்வு பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும் நூற்றுக் கணக்கானோர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே ஜோ பைடனின் பதவியேற்பு விழாவும் நாடாளுமன்ற கட்டடத்திலேயே நடைபெறவுள்ளது. ஜோ பைடன் பதவியேற்பு விழாவின் போதும் நாடாளுமன்றத்தில் ஆயுதம் ஏந்திய நபர்கள் தாக்குதல் நடத்தலாம் என அமெரிக்க உளவு பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து நாடாளுமன்ற கட்டடம் முழுவதுமே பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே ஜோ பைடன் பதவியேற்பு விழாவின் போது, நாடாளுமன்ற கலவரத்தை போல நாடு முழுவதும் உள்ள 50 மாகாணங்களிலும் வன்முறை சம்பவங்களை நிகழ்த்த ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க உளவுத் துறை எச்சரித்துள்ளது.

இதனால் தலைநகர் வொஷிங்டன் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகள் முழுவதும் இராணுவ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற கட்டடம், அலுவலக கட்டடங்கள், உச்ச நீதிமன்றம் ஆகிய பகுதிகளில் 7 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. 25 ஆயிரம் தேசிய பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஜோ பைடனின் பதவியேற்பு விழா காரணமாக தலைநகர் வொஷிங்டனில் ஏற்கனவே அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் மூன்று பிள்ளைகளின் தந்தை
## சடலமாக கண்டெடுப்பு

வவுனியா தரணிக்குளம் பகுதியில் தலையில் காயங்களுடன் மூன்று பிள்ளைகளின் தந்தை சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்த சிலர் இன்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

குறித்த சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த ஆ.யேசுதாசன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

குறித்த மரணம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சூடானில் இரு பழங்குடி இன குழுக்களிடையே மோதல்: 83பேர் உயிரிழப்பு!



வடக்கு ஆபிரிக்க நாடான சூடானில் உள்ள டார்பூர் பிராந்தியத்தில் எல் ஜெனீனா நகரில் வன்முறை வெடித்ததைத் தொடர்ந்து இறந்தவர்களின் எண்ணிக்கை 83யை எட்டியுள்ளதாக மருத்துவர்கள் மத்திய குழு (சி.சி.எஸ்.டி) தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக நடந்த இந்த மோதலில் 160பேர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு அறிக்கையில், காயமடைந்தவர்களை வெளியேற்றுவதில் மருத்துவ குழுக்கள் செயற்பட்டு வருவதாகவும், அவர்களில் சிலர் இராணுவ வீரர்கள் என்றும் குழு தெரிவித்துள்ளது.

மேற்கு டார்பூர் மாநிலத்தின் தலைநகரான ஜெனீனாவில் சம்பவத்தை நேரில் கண்டவர்கள், நிலைமை இன்னும் பதற்றமாக இருப்பதால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

நகரின் புறநகரில் அமைந்துள்ள உள்நாட்டில்இடம்பெயர்ந்தோருக்கான கெரெண்டிங் முகாமைச் சுற்றி தொடர்ந்து மோதல்கள் நடந்து வருவதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதனால், மேற்கு டார்பூர் மாநில அதிகாரிகள் மாநிலத்தில் 24 மணி நேர ஊரடங்கு உத்தரவை அறிவித்துள்ளனர்.

மசாலித் என்ற பழங்குடியின குழுவினருக்கும் அராப் பழங்குடியினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலிலேயே அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த மோதலின் போது, இரு தரப்பையும் சேர்ந்தவர்கள் கூர்மையான ஆயுதங்களால் ஒருவரை ஒருவர் சரமாரியாக தாக்கிக் கொண்டனர். வீடுகள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன.

# கொரோனா மரணம் 270 ஆக உயர்வு!

கொரோனா வைரஸ் தொற்றினால் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் அறுவர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்கள் தொடர்பான முழுமையான விபரத்தினை அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு 3 ஐச் சேர்ந்த 63 வயதான பெண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த 17 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது மரணத்திற்கான காரணம் கொவிட்19 நிமோனியா மற்றும் நீரிழிவு தீவிரமடைந்தமை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கொழும்பு 15 ஐச் சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த 15 ஆம் திகதி



உயிரிழந்தார்.

அவரது, மரணத்திற்கான காரணம் கொவிட்19 நிமோனியா என குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவர் முதியோர் இல்லத்தில் கடந்த 15ஆம் திகதி உயிரிழந்தார்.

கொவிட் 19 நிமோனியா நிலையே அவரது மரணத்திற்கான காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், களுத்துறை தெற்கு பகுதியைச் சேர்ந்த 65 வயதான ஆண் ஒருவர் களுத்துறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த 14 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது மரணத்திற்கான காரணம் கொவிட்19 நிமோனியா, இதய நோய் மற்றும் நீரிழிவு தீவிரமடைந்தமை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெஹிவளையைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவர் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில் கொவிட்19 தொற்று உறுதியானவராக அடையாளம் காணப்பட்டார்.

அதன்பின்னர் அவர் இரணைவில் கொரோனா சிகிச்சை மையத்திற்கு மாற்றப்பட்ட நிலையில், கடந்த 18ஆம் திகதி உயிரிழந்தார்.

கொவிட் 19 தொற்றினால் ஏற்பட்ட நிமோனியா நிலையே அவரது மரணத்திற்கான காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இரத்தினபுரி பகுதியை சேர்ந்த 65 வயதுடைய ஆண் ஒருவர் இரத்தினபுரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவர், ஹோமாகம பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் கடந்த 18 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது, மரணத்திற்கான காரணம் கொவிட்19 நிமோனியா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இதுவரை நாட்டில் பதிவான மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 270 ஆக உயர்வடைந்துள்ளது.